# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 94/மா/2023**
**நாள் : 23.05.2023**

திரு. G.M. சங்கர்,
மடிப்பாக்கம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 15.02.2023 நாளிட்ட மனு 20.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 94/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

> "கடந்த 12.04.2018ம் தேதியிட்ட கடிதத்தில் கண்டுள்ளவாறு மடிப்பாக்கம் பகுதிவாழ் முஸ்லீம் மக்களின் கையெழுத்துடன் மடிப்பாக்கம் சதாசிவம் நகரில் 51,839 சதுர அடி கொண்ட மாநகராட்சி மயான பூமியில் இறந்தவர்களின் உடலை நல்லடக்கம் செய்ய (கபர்ஸ்தான்) இடம் ஒதுக்கீடு செய்யவேண்டி ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் மனு அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், தலைவர், வக்பு வாரியத்திற்கும், அரசு சார்பு செயலாளர் சிறுபான்மையினர் நலத்துறைக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரசு சார்பு செயலாளர், சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தக்க நடவடிக்கை எடுக்க கோப்புகளை அனுப்பியுள்ளார். இருந்தபோதிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் நினைவூட்டல் கடிதம் ஆம் ஆத்மி கட்சியின்

வழக்கறிஞர் அணி சார்பாக அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சென்னை மாவட்ட ஆட்சியர் கடந்த 06.09.2019 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் கவனத்திற்கு மேற்படி கோரிக்கை சம்பந்தமாக கோப்புகளை அனுப்பியுள்ளார். ஆனால் கடந்த 3 வருடமாக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆகையால் உடனடியாக மடிப்பாக்கம் சதாசிவம் நகரில் அமைந்துள்ள 51839 சதுர அடி கொண்டுள்ள மாநகராட்சி மயான பூமிக்குள், மடிப்பாக்கம் 187 மற்றும் 188வது வார்டு பகுதியில் வசிக்கும் முஸ்லீம் மக்களுக்கென இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் (கபர்ஸ்த்தான்) செய்ய தனியாக இடம் ஒதுக்கீடு செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்கும்படியும், ஆதாரங்களுடன் கடிதங்கள் அனுப்பியும் இதுநாள்வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத மண்டலம்-14 சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் அவர்களின் மீது முறைமன்ற நடுவச் சட்டப்படி தக்க நடவடிக்கைகள் எடுக்ககோரி தங்களை பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 19.04.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -14 பகுதி-42 கோட்டம்-188 மடிப்பாக்கம் சதாசிவம் நகர் 4வது பிரதான சாலையில் உள்ள மயானபூமி குறித்து வருவாய்த்துறை ஆவணங்களில் புல எண்.101/2, 23.5 ஏர்ஸ் (0.58 ஏக்கர்ஸ்) பரப்பளவு கொண்ட மயானம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின்போது மடிப்பாக்கம் ஊராட்சி இணைவதற்கு முன்பாகவே மேற்கண்ட மயான பூமி இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்களுக்கு என தனித்தனியாக இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை. தற்போது மேற்கண்ட மயான பூமியில் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மட்டுமே இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யப்படும் இடமாக பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மயான பூமியில் முஸ்லீம் மக்களுக்கென இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் (கபர்ஸ்த்தான்) செய்ய தனியாக இடம் ஒதுக்கீடு செய்வது குறித்து கருத்துரு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம்(ம)உடைமைத்துறை) அவர்களுக்கும் மற்றும் மாநகர சுகாதார அலுவலர், பொது சுகாதாரத்துறை அவர்களுக்கும் மண்டலம் அலுவலர் மண்டலம் - 14 அவர்களால் 17.04.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் (ம) உடைமைத்துறை) மற்றும் மாநகர சுகாதார அலுவலர், பொது சுகாதாரத்துறை அலுவலகத்திலிருந்து கருத்துரு கிடைக்கப்பெற்றவுடன் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 03.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் சதாசிவம் நகரில் 51839 சதுர அடிகொண்ட மயான பூமி உள்ளது. அங்கு காலமான இந்துக்கள் மற்றும் கிறித்துவர்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றனர். ஆனால், காலமான முஸ்லீம் மக்களை நல்லடக்கம் (கபர்ஸ்தான்) செய்வதற்கான இடம் அங்கு இல்லை. இறந்துபோன முஸ்லீம் மக்களை நல்லடக்கம் செய்ய சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை உளளது. பெருவாரியான முஸ்லீம் மக்கள் வசிக்கும் எங்கள் பகுதியில், முஸ்லீம் மக்களுக்கென தனியாக நல்லடக்கம் செய்வதற்கான இடத்தை மேற்கண்ட சதாசிவம் நகரில் உள்ள 51,839 சதுர அடி கொண்ட இடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு மாநகராட்சியிடம் கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், எங்களது மனுக்களின் மீது மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பெருங்குடி மற்றும் பள்ளிக்கரணை போன்ற இடங்களில் இந்து, முஸ்லீம் மற்றும் கிறித்துவர்களை நல்லடக்கம் செய்ய ஒரே இடத்தில் தனித்தனியாக மாநகராட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைப் போன்று எங்கள் பகுதியிலும் முஸ்லீம் மக்களின் இறந்தவர்கள் உடல்களை நல்லடக்கம் செய்ய மேற்கண்ட சதாசிவம் நகரில் உள்ள 51,839 சதுர அடி கொண்ட இடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 14 உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 கோட்டம் 188 மடிப்பாக்கம் சதாசிவம் நகர் 4வது பிரதான சாலையில் உள்ள மயான பூமி குறித்து வருவாய்த் துறை ஆவணங்களில் புல எண் 101/2, 23.5 ஏர்ஸ் (0.58 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மயானம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மடிப்பாக்கம் ஊராட்சி, சென்னை மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்பாகவே மேற்கண்ட மயான பூமியில் பொதுவாக இறந்தபோன இந்துக்கள் மற்றும் கிறித்துவ மக்களை நல்லடக்கம் செய்யும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு முஸ்லீம் மக்களுக்கென தனியாக இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை. மேற்கண்ட மயான பூமியில் முஸ்லீம் மக்களின் இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய தனியாக இடம் ஒதுக்க மாநகராட்சியின் வருவாய் துறை, பொது சுகாதாரம் ஆகிய அலுவலகத்திற்கு 17.4.2023 அன்றும் கருத்துரு வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட அலுவலகங்களிலிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன் தொடர் நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மண்டல அலுவலர் 14 அவர்களின் 17.4.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் சதாசிவம் நகரில் உள்ள மாநகராட்சி மயான பூமியில் மடிப்பாக்கம் 187 மற்றும் 188 வார்டு பகுதியில் வசிக்கும் முஸ்லீம் மக்களுக்கென இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் (கபர்ஸ்தான்) செய்ய தனியாக இடம் இல்லையாதலால், அவர்களுக்கான தனி இடம் ஒதுக்குமாறு கோரியுள்ளார்.

மேற்கண்ட இடம் வருவாய்த் துறை ஆவணங்களில் புல எண்.101/2, 23.5 ஏர்ஸ் (0.58 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மயானம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மடிப்பாக்கம் ஊராட்சி பெருநகர மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்பாகவே மேற்கண்ட மயான பூமியில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமே இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யப்படுகின்றனர் என்றும், அங்கு முஸ்லீம்களுக்கு தனியாக இடம் ஒதுக்கப்படவில்லையெனவும், முஸ்லீம் மக்களுக்கென இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் (கபர்ஸ்தான்) செய்ய தனியாக இடம் ஒதுக்கீடு செய்வது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் (நிலம் (ம) உடமைத்துறை) அவர்களுக்கும் மாநகர சுகாதார அலுவலர், பொது சுகாதாரத் துறை அவர்களுக்கும் 17.4.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் அறிக்கையிலும், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் 2018ஆம் வருடம் முதல் மேற்கண்ட கோரிக்கை குறித்து பல நிலைகளில் மனு கொடுத்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் அலுவலர்கள், இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் மட்டுமே மடிப்பாக்கம் மயானபூமியில் முஸ்லீம் மக்களின் இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய இடம் ஒதுக்குவது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை மற்றும் பொது சுகாதாரம் ஆகிய அலுவலகங்களுக்கு 17.4.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலர்கள் எவ்வளவு மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்பதே இந்நடவடிக்கை காட்டுகிறது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புவதுடன் இத்தகைய மெத்தனப்போக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் புகார் மனுக்களின் மீது

உரிய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவது சரியன்று. மனுதாரர் 2018ஆம் ஆண்டு அளித்த புகார் மனு மீது அப்போதே பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் துறை மற்றும் சுகாதார துறைகளிடம் கருத்து கேட்டு உரிய நடவடிக்கை எடுத்து இருந்தால், இம்மாதிரியான புகார் மனுக்களை தவிர்த்து பெருநகர சென்னை மாநகராட்சியின் செயல்பாடுகளை பொது மக்கள் பாராட்டும் சூழ்நிலை உருவாகி இருக்கும் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மேலும், மனுதாரர் பெருங்குடி மற்றும் பள்ளிக்கரணை போன்ற இடங்களில் இந்து, கிறிஸ்தவர், முஸ்லீம் ஆகிய மக்களின் இறந்தவர்களை நல்லடக்கம் செய்ய ஒரே இடத்தில் தனித்தனியாக மாநகராட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த நிலையில், அதனை முன்னுதாரணமாகக் கொண்டும் ;

Tamilnadu Urban Local Bodies Act, 1998 **<u>Section 172; Burial and burning grounds and crematoria</u>** :

" 172(4) The council shall provide and maintain places to be used as burial or burning grounds or crematoria either within or outside the municipal limit and may charge and levy rents and fees for the use there of as may be fixed by the council; "

and

T.N.U.L. Bodies Rules, 2023யில் உள்ள:-

**<u>Rule 394 Framing of bye-laws and regulations by the council:-</u>** (1) For the purpose of enabling the council to make bye-laws and regulations under sub-section (1) of the section 199 of the Act, the Director shall communicate a list of matters for which bye-laws may be made as given in the schedule to the Commissioner.

Schedule
(See Rule 394 (1)

The council may make bye-laws not inconsistent with the Act or rules made there under or with any other law to provide:-

20 (a) for the regulation of burial and burning grounds' and other places for the disposal of Corpses;

மேற்கண்ட சட்ட பிரிவு மற்றும் விதியின்படியும், மடிப்பாக்கம் மயான பூமியில் முஸ்லீம் மக்களின் இறந்தவர்களை நல்லடக்கம் செய்ய தனியாக இடம் ஒதுக்குவது குறித்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. இந்நேர்வு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தின் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை தொடர்புகொண்டு உரிய தொடர்

நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
வழக்கறிஞர்,
57B, லெஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

3) துணை ஆணையாளர் (Health)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.